www.padippakam.com

202
16/5/94

# புலியின் பேயரசும் பிணம் தின்னும் சாத்திரங்களும்

இலங்கையின் தமிழ் மக்களின் வரலாற்றில் கடந்த 10 ஆண்டுகள் இரத்தத்தால் தோய்ந்த வரலாற்றை -யுடையதகும். ஆயிரக்கணக்கான மக்களும் போராளிகளும் இலங்கை மண்ணைதம் உதிரத்தால் குளிப்பாட்டிய காலமாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போரிற்கு தம் சண்டித்தனத்தின் மூலம் தலைமைபெற்ற விடுதலைப்புலிகள் இன்று தமது பதவிகளுக்காக நாய் சண்டையில் இறங்கியுள்ளனர் முன்பு உட் கொலைகள் மூலம் எதிரானவர்களை அடக்கியவர்கள் அண்மைக் காலமாக இச் சண்டை - யானது புலிகளால் முடிமறைக்கப்பட்டபோதிலும் வெளியே வந்து நாறத்தொடங்கிவிட்டது. புலிகளின் பிரதித் தலைவராகவும் பிரபாகரனுக்கு அடுத்துஉயர்ந்த ஸ்தானத்தில் இருந்தவரும் புலிகளின் இராணுவநடவடிக்கைகளில் பெரும்பங்குவகித்தவருமான மாத்தையா என அழைக்கப்படும் மகேந்தி -ரராஜா அநேகமாக மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுவிட்டதாக செய்திகள். அவருக்கு ஆதரவாகவும், இந்தியக்கைக்கூலியென எதிராகவும் பிரச்சாரங்களும் அறிக்கைகளும்நடந்து தற்போது சற்று ஓய்விற்குவந்துள்ளது. இந்தநிலையில் முன்பு ஒற்றுமையாக இருந்து தமிழ் மக்களை மேய்த்தவர்களும் கொடுமைப்படுத்தியவர்களும் இன்று நான் மாவீரர் நீ துரோகி என சந்திக்கு சந்தி சண்டையில் இறங்கியிருப்பதவற்கான காரண காரியங்களை ஆராய வேண்டியது, நீதியின் பெயரால் இடப்பட்ட கட்டளை ஆகும். இன்று குரல்வளை அறுக்கப்பட்டுள்ள மாத்தையா முன்பு பல போராளி களினதும் மக்களினதும் குரல் வளையை அறுத்தவராவார். 83ம் ஆண்டுகள் வாக்கில் வன்னிப் பகுதி -களில் முதல்முதலில் தன் இராணுவ நடவடிக்கையைத்தொடங்கியகாலம் பிரபாகரன் தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசம் பூண்டிருந்தகாலமாகும். சிறிலங்கா இராணுவத்தின் மேல் சில இராணுவத்தாக்கு -தல்களையும் ஏனைய சகோதர இயக்கங்கள் மேல் பல இராணுவத்தக்குதல்களையும்தொடங்கிமிகக் கொடூரம் மிகுந்த மனிதனாக பிரபல்யமாகிய மாத்தையா தன் இராணுவத்திறனாலும் வல்வெட்டித் துறை மண்ணின் மைந்தன் என்பதினாலும் பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரியவரானார். சகஇயக்கங் களை வேட்டையாடுவதிலும் கொல்லுவதிலும் மிக விருப்புக் கொண்டிருந்த மாத்தையாவைசகல இயக் கங்களும் பெரும் அரக்கனாகவே கண்டு அஞ்சின இவரால். வவுனியா பகுதியில் சகஇயக்கமொன்றின் உறுப்பினர்களை கொண்டே அவர்களின் புதைகுழிகளை வெட்டிவித்து அவர்களைஅதிலிலே சுட்டுக் கொன்றமை வன்னிப்பகுதிகளில் மட்டுமல்ல ஏனைய தமிழ் பகுதிகளிலும் பிரசித்தமான தொன்றகும். மனிதத்தன்மையற்ற இத்தகைய காட்டுமிராண்டிநடவடிக்கைகட்கு பெயர்பேன மாத் தையாவால் துரோகி முத்திரை குத்தப்பட்டு பலநல்ல விடுதலைவிரும்பிகள் உட்பட நூற்றுக் கணக்கானோர் புதைகுழிக்குள் அனுப்பப்பட்டனர் வன்னிப்பகுதிக் காடுகளில் காலம்காலமாக பரம் பரை பரம்பரையாக வேட்டையாடி வந்த பல சிறந்த தமிழ்வேட்டைக்காரர்கள் மட்டுமல்லாமல் ஆடு மாடு வியாபாரம் செய்த பல முஸ்லீம் மற்றும் சிங்கள சாதாரண ஏழை மக்கள் பலர் மாத்தையாவினால் காடுகளுக்குள் சமாதி வைக்கப்பட்டனர் இதற்கு அவர்கள் உளவாளிகள் மற்றும் தமது மறைவிடம் கண்டுபிடிக்கப்பட்டுவிடுமென்ற நியாம் சொல்லப்பட்டது. அதன் நிமித்தம்இவர்கள் பரலோகம் அனுப்பிவைக்கப்பட்டனர். இதுவே மாத்தையாவின் ஆரம்பகால வரலாறு ஆகும். இந்தநிலையில் யாழ்ப்பாணப் பகுதியின் இராணுவநடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த கிட்டு என அழைக்கப்படும் கிருஷ்ணகுமாரின் நடவடிக்கைகள் மாத்தையாவை குழப்பின. ஏனெனில் யாழ்ப்பாணப் பகுதியில் இராணுவநடவடிக்கைகள் போல் மாத்தையாவினால் சாதிக்க முடியவில்லை யாழ்ப்பகுதியில் தான் பொறுப்பேற்றால மேலும் புகழும் அதிகாரமும் பெறமுடியுமென மாத்தையா கருதினார். எனவே யாழ்ப்பகு தி தளபதியாக மாறுவதற்காக பிரபாகரன் ஊடாக முயச்சித்தார். ஆனால் யாழ்ப்பகுதி மக்கள் மத்தியில் கதாநாயகனாகப் பவனி வந்த கிட்டு தன் இடத்தை மாத்தையாவிற்கு மட்டுமல்ல எவரு க்கும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. குள்ளமான தோற்றமுடைய எவரின் பார்வையிலும் மதிக்கத்தக்க தோற்றத்தைக் கொண்டிராத எப்போதும் தோளில் குரங்குடன் காணப்படும் கிட்டுவை ஒட்டவொறுத்த நபராக மாத்தையா விளங்கினார். கிட்டுவோ தன் புகழ்பெற்ற யாழ்ப் பகுதியையும் இராணுவத்தை தாக்கிப்பெற்ற மதிப்பையும் இழக்க ஒருபோதும் விரும்பவில்லை. பிரபாகரன் மாத்தையாவின் பக்கமே நின்றார். எனினும் யாழ் புலிகளின் மத்தியில் கிட்டுவிற்கு அசைக்க முடியாத செல்வாக்கு இருந்தது. கிட்டு சக தன்உறுப்பினர்களை தூஷணவார்த்தைகளால் பேசுதல், அடித்தல் போன்ற சாதாரணதெருச்சண்டியனுக்குரிய கீழ்த்தன குணங்களைக் கொண்டிருந்தபோதிலும் இராணு வத் தாக்குதல்களின் போது அவர் காட்டிய அசட்டுத்துணிச்சல் யாழ் புலிகள் பல பேரைக் கவர்ந்திருந்தது. எனவே யாழின் முக்கிய புலி உறுப்பினர்கள் பலர் கிட்டுவை தம் இரட்சனாகக் கண்டனர். அத்தோடு கொழும்பின் ஆங்கிலப் பத்திரிகைகள் உட்படபல வெளிநாட்டுப் பத்திரிகைகள் புலிகள் என்பதை விட்டு கிட்டு Boys என்றே யாழ் புலிகளை குறிப்பிட ஆரம்பித்தனர். பல கட்டுரைகளையும் கிட்டுவின் படங்களையும் வெளியிட்டனர். கிட்டு மிகக் கவனமாக தன் இடத்தையும் புகழையும் காப்பாற்றி வந்தார். ஏனைய இயக்கங்களை ஈவிரக்கமின்றி தேடி அழித்தார் மற்றைய இயக்கங்களின் பெண் உறுப்பினர்களை படு கேவலமாக காட்டு மிராண்டித்தனமாக நடத்தினார். யாழ் பல்கலைக் கழகத்தில் கிட்டுவிற்கு எந்த ஒருமரியாதையும் கௌரவமும் கிடைக்கவில்லை. கல்வி கற்ற நல்ல அரசியல் சிந்தனை உடைய பல்கலைக்கழக மாணவர்கள் கிட்டுவை ஒரு போதும் மதிக்கவில்லை. அவரின் நடத்தைகளையும் அரசியல் பேச்சுக்களையும் நையாண்டியாகவே பார்த்தனர். எனவே கிட்டு பல்கலைக்கழகத்திலும் மிகச் சிறந்தபல மாணவர்களை கொலை செய்தார். அப்படிக் கொலை செய்யப்பட்டவர்களில் விஜிதரன், விமலேஸ்வதிரன் ஆகியோர்அடங்குவர். கிட்டுவிற்கு ஆங்கிலஅறிவு சூனியமாக இருந்த போதிலும் அப்போது யாழ்ப்பகுதியில புலிகளின்பேச்சாளராக விளங்கிய ரகீம் என்பவரை தன்னோடு

www.padippakam.com

எப்போதும் வைத்துக்கொண்டு யாவரையும் சமாளித்து வந்தார். அக்காலகட்டத்தில் கிட்டுவின் புகழானது பிரபாகரனின் புகழைமிஞ்சி வளர்ந்தது. பிரபாகரன் இதை விரும்பவில்லை. அவர்ஆத்திரம் அடைந்தார் கிட்டுவின் இடத்திற்கு மாத்தையாவை மாற்றும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. கிட்டு வினதும அவரது சகாக்களினதும் நடவடிக்கைகள் பிரபகானின் தனிப்பட்ட உளவுப்பிரிவால் இடை விடாமல் வேவு பார்க்கப்பட்டடு வந்தது அதன் மூலம் கிட்டுவின் குறைகளைக் கண்டு பிடித்துஅவரை மாற்றமுயச்சிகள் எடுக்கப்பட்டது. அதே நேரத்தில் வீரம் நிறைந்த கிட்டு தப்பித் தவறிக் கூட வன்னிப்பகுதிக்குள் நுழைவதைத் தவித்து வந்தார்.ஏனெனில் மாத்தையா கிட்டுவை வஞ்ம் திர்க்க நேரம் பார்த்திருந்தர் அப்போது மன்னார் பகுதியில் தளபதியாக இருந்த விக்டர் கிட்டுவின் உதவியை ஒருமுறை கோரியபோது மாத்தையா காரணமாக கிட்டு வன்னிப் பகுதிக்குள் நுழைவதை தவித்தார். மாத்தையா தான் யாழ்ப் பகுதிக்குள் மாறும் முயற்சியைத்தொடந்து வந்தார் எனவே கிட்டுவின் சகாக்கள் மாத்தையாவல் கிட்டுவிற்கு ஆபத்துஏற்படும் என்பதை உணர்ந்து எச்சரிக்கையோடு இருந்தனர் .இந்தநிலையில் யாழில் தனது காதலியைச் சந்தித்துவிட்டு இன்பமயக்கத்தில் திரும்பிக் கொண்டுருந்த கிட்டுவை அதிர வைத்த சம்பவம் நடந்தது.எப்போதும் ஆள் அம்பு சகிதம் தன் மெய்ப்பாதுகாவலர்கள் சூழப் பவனிவரும்கிட்டு மீது கைக்குண்டு வீசப்பட்டது. அது அவர் உயிரைப் பறிக்கத்தவறியதோடு ஒரு காலை மட்டும் பறித்து அங்கவீனப்படுத்திவிட்டது. அத்தோடு கிட்டுவின் சாகசங்கள் முடிவிற்கு வந்தன.ஒரே நாளில்அவர் மூலைக்குள் தள்ளப்பட்டர் அவரின் முக்கிய சகாக்கள் பதவி மற்றம் சொய்யப்பட்டனர்.மிகமிக நெருக்கமானவர்களும் பலர் மாயமாக காணாமல் போயினர். கிட்டுவின் பலம் முழுமையாக அழிக்கப்பட்டு விட்டது.இவற்றை யார் செய்வித்தது என யாழ் மக்கள் நன்றாக அறிந்திருந்தனர்.மாத்தையாவே கிட்டுவிற்கு -குண்டு எறிவித்தார் என்பதும் கிட்டுவில் விசுவாசம் வைத்து சண்டித்தனம் விட்ட கிட்டுவின் நெருங்கிய சகாக்கள பலர் கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்திற்கு எதிராக திறமையாகப் போராடி இருந்த போதும் இரகசிய மாககதை முடிக்கப்பட்டது.இப்போது கிட்டு சிறகொடிந்தபறவை யானார். பிரபாகரனிடம் சரணடை ந்து அதன் மூலம் தன் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்கு இழிந்தார். கிட்டுவின் வீழ்ச்சியோடு மாத்தையாவின் எழிச்சி ஆரம்பமாயிற்று. அதற்கு வலுச் சேர்ப்பது போல் இந்திய ராணுவம் இலங்கையில் புகுந்து தன் ஆக்கிரமிப்பைத் தொடங்கியது. புலிகள் சாவகச்சேரியில் இந்திய இராணுவத்துடன் யுத்தத்தை தொடங்கியபோது மாத்தையா எதுவித தடையுமின்றி மிக இலகுவாக த் தலைமையைஎட்டினார்.மாத்தையா பல வெற்றிகரமாக தாக்குதல்களை இந்திய இராணுவத் திற்குஎதிராக ஆரம்பத்தில்நிகழ்த்திபோதிலும் பிற்பகுதியில் இந்தியஇராணுவத்தின்வலிமையை எதிர்கொள்ளமுடியாமல் காடுகளுக்குள் ஓடவேண்டி ஏற்பட்டது . எனினும் வடக்கு ராணுவநடவடிக்கை களின் போது பிரபாகரனை பாதுகாப்பான இடங்களில் பதுங்கி இருக்கும் படி செய்துவிட்டு யுத்தத்தை தொடந்து நடத்தினார். பிரபாகரன் ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொரு இடமாகஇடம் மாறி மாறிஓடிக் கொண்டிருந்த காலமது. இந்திய இராணுவத்துடனான யுத்தம மாத்தையாவிற்கு இலங்கையிலும் இந்தியாவிலும் பெரும் புகழ்தேடித்தந்தது. புலிகள் இயக்கத்திலும் உயர்ந்த பல பொறுப்புக்களில் இருந்த பலர் மாத்தையா சொற்கேட்டு நடக்கும் நபர்கள் ஆயினர். புலிகள் இயக்கத்தில் பிரபாகரனு -க்கு சமமாக மாத்தையா வளர்ந்தர் மாத்தையா பாலசிங்கம்,காசிஆனந்தன் பேபிசுப்பிரமணியம் போன்ற புலிகளின முக்கியஸ்தர் எவரையும் கணக்கில் எடுக்கவில்லை.பிரபாகரனின் அனுமதியின்றியே கட்டளைபிறப்பிக்கும் அளவிற்கு அவர் வளர்ந்தார். பிரபாகரனைப் போலின்றி நெருக்கடிகளின்போது இந்தியாவில் பதுங்கி இராமல் 10 ஆண்டு காலம் தமிழ்ப்பகுதிகளில் இருந்த மாத்தையாவை பிரபாகரன் பதவியை விட்டு இறங்கச் சந்தப்பம் பார்த்திருந்தார். உயிருடன் இருக்கும் போது புலிகளின் எந்த உறுப்பினாகளுக்கு உயர்ந்த அந்தஸ்தோ பெரும் பதவியோ கொடுக்காத பிரபாகரன் அவர்கள் இறந்த பின்பு கப்டன்,லெப்ரினன பதவி பட்டம் கொடுக்கும் பிரபாகரனால் தனக்கே உரிய நரித்தனத்தோடு வேலையில்இறங்கினார். இந்தியாவினுடனான யுத்தம் முடிந்ததும் மாத்தையாவின் இராணுவமுக்கியத்துவத்தை குறைக்கும் நோக்குடன் அவர் புலிகளின் மக்கள் முன்னணிக்குத் தலைவராக்கப்பட்டார்.புலிகளின் மக்கள் முன்னணியை அமைக்கும் பொறுப்பு அவருக்கு கொடுக்கப்பட்டது. பாலசிங்கம், காசிஆனந்தன் பேபிசுப்பிரமணியம் போன்றோர் முன்னணிக்கு கொண்டுவரப்பட்டனர். இதன் மூலம்மாத்தையா இரண்டாம் மூன்றம் இடத்திற்கு -தள்ளப்பட்டார.இதனால் மாத்தையா ஆத்திரமடைந்தார். தனக்கு ஆதரவாளர்களைத் திரட்டத் தொடங்கினார்.பிரபாகரனோடு ஒப்பிடுகையில் இராணுவ மற்றும் அரசியல் அறிவில் உயர்ந்த நிலையில் மாத்தையா விளங்கியமை யால் பிரபாகரன் தன் தலைமைப்பதவிக்கு மாத்தையாவால் ஆபத்து என அஞ்சினார்.பிரபாகரனின் சித்தாந்தமான தன் கட்டளைக்கு கீழ்ப்பணியாதவர்களை அடக்குவதல்ல அழிப்பதென்ற கொள்கை மாத்தையா அளவில் சிரமமாயிற்று. புலிகள் இயக்கத்தின் இராணுவத்தில் மிக மதிப்பு மிக்கத் தலைவராக மாத்தையா தற்போதும் விளங்கிய படியால் பிரபாகரன் சற்றுத் தாமதிக்க வேண்டி வந்தது மாத்தையாவும் தன் பலத்தைப் பெருக்கிக் கொள்ள தனக்கு ஆதரவாளர்களை திரட்டினார்.இவ்வாறு இருவருக்கும் இடையிலான நிழல் யுத்தம் தொடர்ந்தது . ஒருவருக்குகொருவர் எதிராக குழி பறிப்பு சதிநாசவேலைகளில் இறங்கினர். இதற்கிடையில் இருவரும் உண்மை நண்பர்கள் போல் பல் இளித்தபடி பத்திரிகைகளுக்கு படங்கள் எடுக்கப்போஸ் கொடுக்கும் நாடகங்கள் ஒரு பக்கத்தால் அரங்கேறின.முடிவாக மாத்தையா தன் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களுடன் பிரிந்து சென்று வேறு இயக்கம் தொடங்க முடிவாயினர்.

வெளிநாடுகளில் அவருடையஅபக்கத்திற்கு நிதி,பிரச் சாரம் மற்றும் வேலைகளுக்கும் ஆட்கள் தெரிவு செய்யும் முயறசிகளும் தொடங்கினார்.அந்த நிலையில் தந்திரமாக பேச என அழைத்து மாத்தையா கைது செய்யப்பட்டார் .அவரின் மிக நெருங்கிய கூட்டாளிகள் பலர் தீர்த்துக்கட்டப்பட்டனர் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். இளைஞர்கள், முதியோர்கள் குழந்தைகள் என்ற பேதமின்றி ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை துரோகிகள் என முத்திரை குத்தி நிலவறையில் போட்ட மாத்தையா தானே நிலவறைக்குள் சிக்கி சித்திரவதைக்குள்ளாக்கப்பட வேண்டியவராக மாறினார்.யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளரும் பெண்ணிலைவாதியுமான ரஜனி திரணகமவையும் ஏனைய பல்கலைக்கழக முற்போக்கு சிந்தனையாளர்களையும் அப்பவி மக்களையும் பிரபாகரனுக்காக வேட்டையாடிய மாத்தையா பின் தானே வேட்டையாடப்பட்டார். சிறிலங்காராணுவத்தையும் அந்திய ராணுவத்தையும் தாக்கிவிட்டு அதற்காக நூற்றுக்கணக்கான இளைஞர்களைப் பலி கொடுத்துவிட்டு அந்த வெற்றியிலும் புகழிலும் தமிழ் மக்கள் மீது அடக்கு முறைகளையும் கொலைகளையும் கட்டு அவிழ்த்து விட்டவர்கள். தமிழ் மக்களின் ஒரே இயக்கம் தாமே என மார் தட்டியவர்கள் இன்று தமக் குள் குத்து வெட்டில் இறங்கியிருப்பதை தமிழ் மக்கள் எப்போதும் போல மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.இவர்களின் அழிவின் பின் சுதந்திரமாகப் பேசவும் திட்டவும் சிரிக்கவும் காத்திருக்கிறார்கள் என்பதை துவக்கை மட்டுமே நம்பி உயிர் வாழும் புலிகளால் உணரமுடியாமல் போனது புதினமல்ல. மக்களை நம்பாமல் துவக்கை நம்பியவர்கள் துவக்கை காட்டி மக்களை வெருட்டி தமிழீழத் தேசித்தலைவராகப்பட்டம் சூட்டி முடியேந்தி புலிக்கொடி தாங்கி புல்லரித்துப் போயிருப்ப வர்களுக்கு அதிகார வெறியில் இப்போது ஒன்றும் புரியப்போவது இல்லை. சரித்திரம் இப்படி எத்தனை பேரின் சாம்பல் மேடுகளின் மேல் எழுந்திருக்கிறது என இவர்களுக்கு ஒரு போதும் விளங்கப் போவது இல்லை. தமிழ் மக்களுக்கு என போராடப் புறப்பட்டு திசைமாறி இலங்கை அரசின் கைக் கூலிகளாக மாறி பதவியும், பஞ்சணையும் பெற்று கொழும்பில் பவனி வரும TELO, PLOT ,E.N.D.L.F, துரோகிளும் .நேரத்திற்கு தகுந்த தாளம் போட்டுத்திரியும் E.P.R.L.F , E.R.O.S'' சந்தப்பவாதிகளும் தமிழ் மக்கள் முதுகில் குத்தி வெகு காலமாகிவிட்டது . தமிழ் மக்கள் யாரையும் நம்பமுடியாமல் தவிக்கிறார்கள். துரோகிகளாலும் காட்டிக் கொடுப்பவர்களாலும் சுற்றி வளைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தம் எதிர் காலம் இருண்டுவிட்டதாக உணர்கிறார்கள் புலிகள் ஒரு பக்கமும் சிறிலங்கா அரசாங்கம் ஒரு பக்கமாக தமிழ் மக்களுக்கு இரண்டு பக்கமும் அடி . தமிழ் மக்கள் வேண்டுவோரெல்லாம் அடிக்கும் மத்தளமாகி விட்டார்கள். புலிகள் தமது மாவீரர்களுக்கு விழா எடுக்கிறார்கள். தம்மை மாவீரர்களாக ஒப்புக்கொள்ளும்படி துவக்கு முனையில் வெருட்டுகிறார்கள. மாவீரர்கள் விழாவின் போது தோரணம் கட்டாதவன் அலங்கரிக்காதவன்,குத்துவிளக்கு ஏற்றாதவன் துரோகிஆக்கப்பட்டு அவன் தலைக்கு நாள் பார்க்கப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களின் 15 ஆண்டு கால போரட்ட வரலாற்றுக் காலத்தில் கொல்லப்பட்ட 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை கண்டு கொள்ள ஆள்கிடை யாது. மாவீரர்களுக்கு நேரமும் கவலையும் அதைப்பற்றிக் கிடையாது. சிறிலங்கா அரசின் காலத்தில் JR ஐயும் சிறிமாவையும் மேடை போட்டுத் திட்டுமளவிற்குதமிழ் மக்களுக்கு உரிமை இருந்தது. ஆனால் இப்போது தமிழரின் ஆட்சி எனச் சொல்லும் புலிகளின் செந்தமிழ் ஆட்சியில் பக்கத்து வீட்டுக்காரனுடன் கூட கதைக்கப்பயம்.தன் நண்பனோடும் மாமன்,மச்சானோடும் அரசியல் கதைத்தால் தலை போய்விடும். அந்தளவுற்கு புலிகள் தமிழ் மக்களுக்கு வழங்கிய சுதந்திரம் ஜனநாயகம் என்பன தமிழ்ஈழம் எங்கும் பெருக்கொடுத்து ஒடுகிறது. எனவே தமிழ் மக்கள் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற இன்றைய நிலையநிலைக்கு தள்ளப்பட்டனர். தமிழ்ஈழமும் வேண்டாம், மாவீரர்களும் வேண்டாம் என மனதில் நினைப்பதை வெளியே சொல்ல முடியமால் பொருமியபடி வாழும் தமிழ் மக்களின்இன்றைய நிலையை இலங்கையில் இருந்து வரும் துன்பம் தோய்ந்த கடிதங்கள் எமக்கு உணர்த்துகின்றன. இந்த நிலையில் மாத்தையாவுக்கு மரண தண்டனை கொடுத்தது பற்றிக் கவலைப்பட யாருக்கும் நேரமில்லை. அவர்களுக்கு தம் வாழ்வைப் பற்றி எதிர்காலச்சொத்து எனக் கருதி சீராட்டி வளர்த்த பத்துப் பன்னிரண்டு வயதுப் பாலகர்கள் புலிகளால் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டு படு கொலையாவது பற்றிக் கவலை. பசியும், பட்டினியும்,சாவும், துயரமும் அவர்களைச் சூழ்ந்துள்ளது. தமிழ்ப்பகுதிகளில் தற்கொலைசெய்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது.பலர் மனநோயாளிகளாக வீதிகளில் அலைவதுமிகச்சாதாரணமான காட்சியாகும். இவர்களில் சிலரை புலிகள் மனநோயாளியாக நடித்து உளவறிதலில் ஈடுபட்டுள்ளவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு புலிக்கொலைஞர்களால்மண்டையில் போடப்பட்டுள்ளனர் என்பது தமிழ்மக்கள் இன்று சந்தித்துக் கொண்டு இருக்கும கொடூரமான உண்மையாகும். அவர்கள் யுத்தத்தில் இருந்து விடுபடத் துடிக்கிறார்கள். சுதந்திரக்காற்றை சுவாசிக்க ஆசைப்பட்ட தமிழ் மக்களுக்கு நாட்டையே சிறையாக்கிவிட்டு புலிகள் ராஜராஜன் ஆண்ட தமிழ்க்கடல் பரப்பு இது என பாடல் பாடிக் கொண்டு இருக்கிறார்கள். இராஜராஜன் கடல் கடந்து அந்நிய தேசங்கட்கு இந்திய இராணுவம் போல் போய் மற்றைய மக்களை அடக்கினான் அழித்தான் என்ற உண்மைக் கதை மறைத்து புலிபாடித்திரிகிறது.வவுனியாவிற்கு அப்பால் போகத்தடை ஆனையிறவிற்கு அப்பால் போகத்தடை ஒருநாளைக்கு முப்பது நாப்பது கட்டையென சைக்கிள் பயணம். யாழ் மக்கள் வாகனங்களை விட்டு மாட்டு வண்டிகளைப் பாவிக்கத் திரும்பி விட்டனர்.

புலிகளிடம் பாஸ் எடுக்க ஆயிரம் முதல் இலட்சம் வரை கொடுக்க வேண்டும். யாழ் குடா நாட்டில் பெண்கள் தொகை அதிகரித்து விட்டது. 30 வயதைத் தாண்டிய குமர்களின் தொகை முன்னெப் பொழுதும் இல்லாதவாறு கூடியுள்ளது. வெளிநாடுகளுக்கு போய் விடமுயலும் ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் யாழ் குடா நாட்டிலும் வன்னிப்பகுதிகளிலும் தம் விடிவை எண்ணி புலிகளுக்கு கொட்டி அழ பல பத்தாயிரங்களுக்கு வழியின்றி வேதனையோடு காலங்கழிக்கிறார்கள்.பத்து வயதுக் குழந்தைகள் கூட புலிகளின் தமிழ்ஈழத்தைவிட்டு வெளியேறமுடியாது. சர்வதேசசட்டங்கள் மனித நீதிவிதி முறைகளுக்கு மாறாக புலிகள் பிணையாக மனிதர்களையே பிடிக்கிறார்கள். சொந்த மக்களையே பிணையாக பிடித்து அடைத்துவைக்கிறார்கள். பிணைநின்றகாரணத்தாலும் பிணைப்பணம் கட்டாத காரணத்தலும் வயதானமூதாட்டிகள்,வயாதனவர்கள் குழந்தைகள் கூட புலிகளின் சிறைகளில் வதைபடுகின்றார்கள். இதுவே இன்றைய புலிகளின் தமிழ்ஈழத்தின் உண்மை நிலை. யாழ்ப்பணத்தில் வெளிவரும் புலிகளின் பாதம்தாங்கிப் பத்திரிகைகள் இவைகளை வெளியிடாதது புதினமல்ல. ஆனால் தமிழ் மக்களின் துயரங்களைச் சொல்ல ஐரோப்பவில் ஒரு பத்திரிகைக்கும் ஆண்மையில்லை. தமிழன் வீரத்தைப் பற்றி பீத்தித்திரியும் அந்தப் பத்திரிகைகள் புலிக்கு குழையடித்து வருவதுடன் வெட்கமின்றி அவர்களை புகழ்ந்து சாமரை வீசும் அடிமைத்தனத்திலும் இறங்கியுள்ளது இந்த நிலையில் இலங்கையில் வாழும் எம் மக்களின் அவலத்தை என் தாய், தகப்பனின், சகோதரியின், நண்பனின், உறவினர்களின் துன்பத்தை வேதனையை எடுத்துக் கூற யார் உள்ளனர்? மாத்தையாவின் மரணதண்டனை பற்றி தமிழ் மக்களுக்கு கவலையில்லை.அவர்கள் தம்மிடையே நடந்த அதிகாரப் போட்டியில் தமிழ் மக்களுக்கு யார் எசமான் என்பதற்காக தம்மிடையே சண்டையிட்டு அழிகிறார்கள். அவர்கள் தமிழ் மக்களுக்காகப் போராடவில்லை பதவிக்கும் அதிகாரத்துக்குமாக தம்மிடையே போட்டி போட்டு ஒருவரையொருவர் அழிக்கிறார்கள். அவன் துரோகி இவன் மாவீரன் என மக்களுக்கு கன நாளைக்கு பொய்சொல்லமுடியாது.வெளிநாடுகளில் இருந்து புலிகளுக்கு சங்கூதித் திரியும் காகிதப்புலிகளுக்கு ஒன்றைப் பற்றியும் சிந்திக்க திறமையோ சுய அறிவோ போதாது. அவர்களுக்கு தெரிந்ததெல்லம் ஒன்றே ஒன்று புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். என்ற வாசகம் தான்.புலிகளின தாகம் இரத்ததாகம் என்பதை மறைத்து. அரிவரி வாய்ப்பாடுமாதிரி இதை சொல்லிக் கொண்டு அரசியல் ஞானம் மிக்கவர்களாக பிரகாசிக்கின்றார்கள். புலிகள் காலால் பணிப்பதை தலையால் செய்து முடிக்கின்ற அந்த புலிகளின் ஐரோப்பிய ஏஜன்டுகள். இப்போது மாத்தையாவுக்கு நேர்ந்த கதியைப் பார்த்து பலருக்கு குலைப்பன் பிடித்துள்ளது. பலருக்கு குழப்பம்,குழப்பம்,குழப்பம் . பின்பு சற்று நிதானித்து மாத்தையாவும் அவர் கூட்டாளிகளும் துரோகிகள் என மாவீரர்களின் வசனத்தை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிக் கிறார்கள்.ஐரோப்பிய காகிதப்புலிகளின் தலைவராக விளங்கும்.திலகர் .பிரான்சுககு குடிவந்த பின்னர் இப்போது ஐரோப்பிய காகிதப்புலிகளுக்கு வசந்த காலம்ஆரம்பித்துள்ளது. மாதாமாதம் நல்ல சம்பளம்,கார்வசதிகள்,பிரான்சில் சில வீட்டுவசதி என்பன உட்பட இலவசங்கள் உண்டு இப்படி மக்களிடம் தண்டிய பணத்தில் ஊரான்வீட்டு நெய்யே என் பொண்டாட்டிகையே என்றகதையாக வாழ்வு இன்பமயமாகப் போகின்றது. ஒரு சிலர் இயக்கக் காசில் ஊழல் கொஞ்சம் செய்து விட்டுஒதுங்கி உல்லாசமாகவுள்ளனர்.கேட்டால் ,உவங்கள் சரிவரமாட்டாங்கள் என்று சுடலைஞானம் பேசுகின்றனர் சோகத்தை சிந்துகின்றார்கள்.வெளிநாட்டுக் காகிதப்புலிகளும் அவர்களின் வால் பிடிகளும் புலிகள் களத்தில் நின்று போரடுவதாக கூறிக் கண்ணீர் மல்கி கரைந்துருகிவருகிறார்கள் ஆனால் இவர்கள் இலங்கை யுத்தத்தால்எந்தவிதத்திலும் பாதிப்புற்றவர்களல்ல. இவர்களின் குழந்தைகள் வெளி நாடுகளில் வசதிகளோடு கல்விகற்று நாகரீகமாகவளர்கின்றார்கள் இவர்கள் தங்களின் குழந்தை களை ஒருபோதும் போராட்டத்திற்கு அனுப்பியதும் இல்லை அனுப்பவும்தயாரகவும் இல்லை. ஆனால் அங்கு அப்பாவி மக்களும் குழந்தைகளும் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை விடுதலைப் போராட்டமென எந்தவித இழப்புமின்றி சட்டை கசங்காமல் இருந்தபடி கூறி நிதி மற்றும் ஆதரவு திரட்டி வருகின்றார்கள் இவர்களின் நிதிதிரட்டல் உண்மையில் அங்கு இருக்கும் மிகுதிமக்களையும் பலிகொடுக்கவே உதவும் .புலிகள் தமிழீத்தை விடமாற்று திட்டத்திற்கும் தயார் என அடிக்கடி கூறிக்கொண்டு அரசோடு பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கையில்.இவர்கள் புலிகள் தமிழ்ஈழத்தை தவிர வேறென்றையும் ஏற்கமாட்டார்கள் என உண்மைக்கு மாறாக ஐரோப்பிய நாடுகளில் கரடிவிடுகின்றார்கள். ஐரோப்பிய நாடுகளில தமிழ் மக்களை முகமூடி போட்டுத் தாக்கியவர்களும் இரவு நேரங்களில் ஒழிந்துதாக்கியவர்களும் பயமுறுத்தி நிதி சேகரித்தவர்களுமான காகிதப்-புலிகளின் ரவுடித்தனம் இப்போது ஒய்ந்துள்ளது தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் **தம்பி** சண்டைப் பிரகண்டன் கதையாக ஜெர்மனியில் பொலிசார் புலிஏஜண்டுகளை சிலஆண்டுகளுக்குமுன்பு சிறைக்குள்தள்ளி விசாரிக்கத் தொடங்கியதும் புலிவீரம்யாவும் எங்கோ பறந்தோடிவிட்டது. இப்போது பலர் சட்டத்துக்கு அடக்கமான பிரசைகளாகிவிட்டனர் ஒருசிலர் புலிச்சோலி வேண்டாமென தம்சோலி பார்க்கின்றனர்.

www.padippakam.com

மாத்தையாவும் பிரபாகரனும் ஒன்றுமறியாத பச்சைப் பாலகன்களை யுத்தத்துக்கு அனுப்பி படுகொலைசெய்தார்கள் புலிகளின் சராசரி வயது இன்று 13, 14 ஆகவே உள்ளது.யுத்தத்தில் அகப்பட்டு பள்ளிப்படிப்பின்றி வளரும் குழந்தைகளை பொம்மையைக் காட்டுவதுபோல் துவக்கைக்காட்டி இளம் சிறுவர்கள் யுத்தத்துக்கு பலிகொடுக்கப்படுகின்றார்கள். எதற்காகப் போராடுகின்றோம் என இந்தக் குழந்தைகட்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் சாகடிக்க படுகின்றார்கள். யுத்தத்துக்கு குழந்தைகளைப் பாவிப்பதில் இன்று முழுஉலகிலும் புலிகளே முன்னணியிலுள்ளனர். பலமனிதாபிமான மற்றும் சர்வதேச அமைப்புகள் இதைக்கண்டித்து வெளி உலகுக்கு கொண்டு வந்துள்ள போதிலும் புலிகள் இந்த கேவலமான மனிதத்தன்மையற்ற உண்மையை உலகிடமிருந்து மறைக்க மாவீரர் விழா நடத்தி கூத்தடிக்கின்றனர் இந்த யுத்தம் யாருக்காக நடத்தப்படுகின்றது.எவரின் நன்மைக்காக நடாத்தப்படுகின்றது.இப்போது நடப்பது விடுதலைப் போராட்டமல்ல வெறும் அழிவுயுத்தமே 5வருடத்தில் 60 ஆயிரம் சிங்கள இளைஞர்களை கொலை செய்த சிறிலங்கா அரசாங்கம் சிங்கள இனத்தை பாதுகப்பதற்காக யுத்தம் செய்வதாக பாசாங்கு செய்கிறது சிங்கள மக்களை ஏய்த்து வருகிறது. அதே போல் புலிகளும் தாமேதமிழர்களின் தலைமையை குத்தகைக்கு எடுத்திருப்பதாக எல்லோரையும் மிரட்டுகின்றனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தமிழ் மக்களோடு இணைந்து வாழ்ந்த முஸ்லிம் மக்களின் சொத்துக்களை பறித்தும், முஸ்லிம் பெண்களை சோதனை என்ற பெயரில் கேவலப்படுத்தியும், உடுத்த உடைகளோடு ஜேர்மனியில் நாசிக் கொலைஞர்கள் யூதர்களை 24 மணிநேரத்தில் வெளியேற்றியது போன்று புலிகள் வெளியேற்றினார்கள். அவர்களிடம் கொள்ளையடித்த பொருட்களை புலிகள் பகிரங்கமாக தம் விற்பனை நிலையங்களில் போட்டு வெட்கமின்றி விற்பனை செய்தனர்.மனிதஉணர்வும் நியாமும் கொண்ட பெருந்தொகையான தமிழ்மக்கள் இச்செயல்களை மனப் பூர்வமாக வெறுத்த போதிலும் தம் எதிர்ப்பைக்காட்ட வழியற்று இருந்தனர் மக்களின் எழுத்தச்சுதந்திரம் கருத்துச்சுதந்திரம் பறிக்கப்பட்டு இருக்கையில் மக்கள் புலிகளின் துப்பக்கிச்சனியனின் சர்வாதிகாரத்தின் முன்பு நிறுத்தப்பட்டு இருக்கையில் தம் மனசாட்சியையும் நியாய உணர்வுகளையும் விடுதலை-யுணர்வுகளையும் சாகடிக்க வேண்டியவரகளாயினர். புலிகளை சமாளிக்க மக்கள் ஒரு பகுதியினர் புலிகள் முன்பு அவர்களை புகழ்பாடவும், ஆதரிப்பதாக பாசங்கு செய்யவும், அவர்களின் முதுகுக்குப்பின்னால் அவர்களை ஒட்டவெறுக்கவும் தூற்றவும்மான சந்தர்ப்பவாத நிலையெடுக்க நிற்பந்திக்கப்பட்டனர். புலிகளின் சர்வாதிகரத்தை விட எதிரியான அரசாங்கத்தின் சர்வாதிகரம் பரவாய் இல்லை எனத் தமிழ் மக்கள் நினைக்கத் தொடங்கிவிட்டனர் எனவே யாவரும் தப்பி கொழும்புக்கு ஓடி வருகினறர்கள் புலிகள் யாவரையும் போக அனுமதித்துவிட்டால் ஒரேவாரத்தில் இவர்களின் தமிழீத்தாயகம் மக்களற்ற தமிழீழமாகி விடும் என்பது ஊறிந்த உண்மை. தம்மை எதிர்ப்பவர்களை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிய புலிகள் இப்போது பொலிஸ் ,பொலிஸ் நிலையம் நீதிமன்றம் என தொடங்கியுள்ளமை சிங்கள அரசாங்கத்துடன் போராடுவதற்கல்ல என்று சிறு குழந்தைக்குக் கூடத் தெரிந்த இரகசியமாகும் தமிழ் மக்கள் மூச்சு விடக் கூட புலிகளுக்குபயந்து கொண்டு இருக்கும் இன்றைய நிலையில் பொலிசும் பொலிஸ் நிலையங்களும் தமிழ் மக்களை எவ்வாறு அடக்கியாளும் என்பதை விளங்கவைக்க வேண்டியது இல்லை பல கல்விமான்கள்,சமூக சேவையாளர் கள், மனிதாபிமானிகள் என்போர் வாய்திறந்து பேசமுடியாதளவு சர்வாதிகரம் தலைவிரித்தாடு கின்றது. புலிகளின் சிறையில் தற்போது 4 ஆயிரம் பேர் வரையுள்ளானர் ஆயிரக்கணக்கானோர் விசாரணைகள் எதுவமின்றி படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இந்த இலட்சணத்தில் புலிகளின் நீதி எப்படியிருக்கும். தமிழ் மக்களின் பேச்சு எழுத்துச்சுதந்திரமும் ஜனநாயகம் என்பன புலிகளால் எப்போதோ புதைகுழிக்கு அனுப்பப்பட்டுவிட்டது. எவ்வளவு கொடுமையாக அநாகரீகமாக தமிழ் மக்கள் நடாத்தப்படுகின்றார்கள் என்பது பலருக்கு விளங்கினாலும் உயிராசையாலும் இதற்கு முன்பு புலிகளின் அநீதிகட்கு எதிராக குரல் கொடுத்தவர்களுக்கு நேர்ந்த கதியை அறிந்துள்ளதாலும் பேசாமடந்தைகளாகியுள்ளனர். முட்டாள்களாக வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். சிந்தனை உரிமை கொலைக் குற்றத்தை விட கொடுமையாகத்தண்டிக்கப்படுகிறது. புலிகள் இலங்கையில் தமிழ் மக்களை வேவுபக்கிர்றார்கள். வீடு,காணி, வங்கிக், கணக்கு முதல் ஆடு,மாடு,கோழி வரை புலிகள் கணக்கு எடுக்கிறார்கள். பலரிடம் மகன், மகள்,வெளிநாட்டில் என யாவும் பறிமுதல் செய்கின்றார்கள். தம் சொந்த மக்களையே ஏன் புலிகள் வேவுபார்க்கின்றனர். என்பதற்கான காரணம் இரகசியமல்ல. புலிகளை தமிழ் மக்கள் வெறுப்பதே அக்காரணமாகும்.பூநரியில் 480 பேருக்கு மேல் புலிகள் இறந்ததாக புலிகளே ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் அதில் தற்கொலையாளிகளாக குண்டுகளைக் கொண்டு சென்று மரணமடைந்தவர்கள் 39 சிறுவர்கள் எனவும் அவர்களின் சராசரி வயது 13, 14 எனவும் செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஏதுமறியாத பச்சைப் பாலகர்களை சாவுக்கு பலி கொடுக்கும் இதுபோன்ற கொடுமைகள் எதுவித தயக்கமும் கூச்சமுமின்றி புலிகளால் செய்யப்பட்டு வருகின்றது. அரசியல் ரீதியில் எந்தவொரு அறிவும்அனுபவமுமற்ற இளம் சிறுவர்கள்,புலிகளின் ஆள் பற்றக்குறையை ஈடு செய்ய பலிகொடுக்கப்படும் கொடுமையை எவ்வாறு தடுத்து நிறுத்துவதென வகையறியாது பெற்றோர்கள் கலங்கிநிற்கின்றார்கள்.பச்சைப்பாலகர்களை இழந்த தாய்மாரின் அழுகுரலை மிஞ்சும் வண்ணம் புலிகள் இறந்த சிறுவர்களை மாவீரர்களாக்கி பிரச்சனைகளை அமுக்க முயற்சிக்கிறார்கள். பயமறியாத இளம் சிறுவர்களை யுத்தத்தில் பாவிப்பதில்புலிகள் நல்ல அனுபவ முடையவர்களாக மாறிவிட்டனர்.

www.padippakam.com

கட்டளையிடுவதை செய்யும் பழக்கம், ஏன் எதற்காக என்ற கேள்விகளும், குழந்தைகளிடமிருந்து பிறப்பதில்லை எனவே புலிகள் தற்போதும் மிக மும்முரமாக அடுத்த யுத்தத்துக்காக பிள்ளை பிடிக்கும் வேலையில் தாய் தந்தையரின் எதிர்ப்பையும் மீறி இறங்கியுள்ளனர். யாழ்குடாநாட்டில் முகாம்கள் முன்பு புலிகளால் ஏமாற்றி அழைத்துச்செல்லப்பட்ட அல்லது பிடித்துச் செல்லப்பட்ட குழந்தைகளை மீட்ககாத்திருக்கும் தாய்மாரின் திட்டலும் ஒப்பாரியும் சாதாரண-காட்சியாகிவிட்டது இன்றைய தமிழ் மக்களின் மீதான அநியாயங்களையும் அடக்குமுறைகளையும் புலிகள் போராடுகிறார்கள் என்ற கோசத்தின் கீழ் யாராவது ஒப்புக்கொள்வர்களாயின் அவர்களும் உண்மையில் தமிழ் மக்களின் துரோகிகளேயாவர். சேர்.பொன். இராமநாதனையும், பொன்னம்பலத்தையும், செல்வநாயகத்தையும் அமிர்தலி ங்கத்தையும், பலா இயக்கங்களையும் கண்டு கடந்து வந்த தமிழ் மக்கள் புலிகளையும் வென்று தோற்கடித்து தம் நாளைய இலட்சியங்களுக்காக தேசிய கௌரத்தைபெறுவதற்காக முன்னேறுவார்கள். அப்போது புலிகளின் புதைகுழிகள் மக்களை வதைத்தவர்களின் நினைவுச் சின்னமாகி விடும். ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களதும் மக்களதும் தியாகத்தையும் சாவையும் பயன்படுத்தி அதனை உரமாக கொண்டு இலாபமடைந்த புலிகள். இன்று அதே தமிழ் மக்களுக்கு அதிகாரபோதையில் துரோகமிழைத்துவருகின்றனர். சிறிலங்கா அரசும் புலிகளும் போச்சுவாத்தை சமாதானம்,என திரைமறைவில் கூடிக் குலாவிக் கொண்டு தமிழ் மக்களின் அழிவிலும் தியாங்களிலுமிருந்து தமது புகழையும் பெயரையும் அறுவடை செய்து கொண்டிருக்கின்றார்கள்.மாத்தையாவுக்கு ஏற்பட்ட கதியானது தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்த ஒவ்வொருவருக்கும் கிடைத்த படிப்பினையிகும் இன்று மாத்தையாவுக்கு மரணதண்டனை கொடுத்தவர்களும் தமிழ் மக்களின் துரோகிகளே ! அவர்களும் மாத்தையா அடைந்த கதியையே அடைவர்கள். எனவே மாத்தையாவின் மரணதண்டனை எம்மை முழுமையாக மகிழ்விக்காது .அதிகாரத்துக்காக சண்டை பிடித்தவர்களில் செத்தவர்களும் வென்றவர்களும் இருபகுதியுமே தமிழ்மக்களுடைய எதிரிககளேயாவர்.. அரசாகம் ,புலி என இரு பிசாசுகளிடமிருந்தும் விடுதலை பெறவும் தேசிய சமத்துவம் சமாதானம் அமைதி பெறவும் போிடும் தமிழ்மக்களைபுரிந்துகெள்வோமாக,உதவுவோமாக.

மக்களின் உரிமைக்கான அமைப்பு

**P,R,O**

**மேற்கு ஜேர்மன் 1,5.1994**